தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 13, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 ஏப்ரல் 26, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.''

செயலுக்கு உரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்புடன் செய்ய வல்லவரே அமைச்சர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புதிய ஆரம்பப்பள்ளி திறக்கும் திட்டம்.

*126 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஜோலார்பேட்டை ஒன்றியம், சின்ன மேட்டூர் ஊராட்சி, புதூர் கிராமத்தில் புதிய ஆரம்பப் பள்ளி திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, 'இல்லை' என்பதுதான் கேள்வி கேட்ட காலத்தில் அதற்குக் கிடைத்த விடை. ஆனால் இப்போது 500-க்கு மேற்பட்ட மக்கள் குடியிருக்கிற குடியிருப்புக்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளி தொடங்கலாம் என்ற ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால். இது அந்தக் கண்ணோட்டத்தில் கருதிப் பார்க்கப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன மேட்டூர் கிராமத்திற்குள் அடங்கிய புதூர் கிராமத்தில் ஏற்கெனவே இதுபோன்ற ஆரம்பப்பள்ளி இருந்தது. அது வாடகைக் கட்டிடத்தில் இருந்த காரணத்தினால், அதை வாடகைக் கட்டிடத்துக்காரர் கொடுக்க முடியாது என்று

சொன்ன காரணத்தினால் ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்னாலே நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அமைச்சர் உத்தரவு வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பள்ளி ஆரம்பிப்பதற்கு மீண்டும் ஒருஇடம் கொடுத்தால் மீண்டும் முயற்சிக்கப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் புதூர் கிராமம் என்பது பெங்களூர் நெடுஞ் சாலைக்கு அருகிலே—பக்கத்திலே ஒரு ஆறு—இருக்கின்றது. அந்த ஆற்றைக் கடந்து பிள்ளைகள் போக முடியாத சூழ்நிலை. அதே போல் சின்ன மேட்டூர் கிராமம் அதிலிருந்து 4 கிலோமீட்டர் இருக்கின்றது. அதை மனதிலே வைத்து அரசே அந்தக் கட்டி டத்தைக் கட்டிக் கொடுத்து அந்தப் பிள்ளைகள் படிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்வதோடு, அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசு உத்தரவு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு செய்தி என்பதற்காக நான் சொல்கிறேன் பள்ளிக்கூடம் தொடங்கலாம் என்று அரசு ஏற்றுக் கொண்டால் கூட ஒரு கட்டிடம் கட்டுவது என்றால் ஓராண்டுக் காலமாகும் எனவே, கட்டிடம் கட்டி தொடங்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கிறபோது, இந்த ஆண்டு கூட வராத நிலைமை ஏற்படும், எனவே, கட்டிட வசதியோ, இட வசதியோ, அந்தக் கிராமத்து மக்கள் செய்து தருவார்களேயானால், உடனடியாக இந்த ஆண்டு 500 மக்களுக்கு மேல் உள்ள கிராமமாக இருக்குமானால் இந்தத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கலாம்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 500-க்கு மேற்பட்ட மக்கள் உள்ள கிராமங் களில் புதிய ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் சொல்கிறார். ஆனால் இரண்டு மைல், மூன்று மைல் தூரம் செல்லக் கூடிய கிராமத்தில் இந்த ஆண்டு பள்ளிக் கூடம் துவங்குவதற்கு இனாமாக இடம் கொடுத்தால் பள்ளி துவக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, 500-க்கு மேற்பட்ட மக்கள் என்ற தொகையில் உள்ள கிராமங்களில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடம் நடத்துவதற்கு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமை இருக்குமானால் மற்ற ஊர்கள் கருதிப் பார்க்கப்படும்.

1990 ஏப்ரல் 26]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள இடத்திலே தான் பள்ளிக்கூடம் என்று சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சியின் போது, 30-ம், அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தாலே அங்கே ஒரு பள்ளி துவங்கலாம் என்று இருந்ததே அந்த அடிப்படையிலே, 30 அல்லது 30-க்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் அந்த ஊரிலே பள்ளி திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, 30 குழந்தைகள் இருக்கிறதா, இல்லையா என்று தெரிவதற்குப் பள்ளிக்கூடம் துவங்கி, அதற்குப் பின்னர் கணக்கு எடுக்க வேண்டும் ஏனென்றால், அந்த வகுப்பிலே சேருவதற்கு அத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களா என்பது முதலில் தெரியாது. இடைக் காலத்திலே ஏற்றுக்கொண்டிருந்த ஒரு கொள்கையின்படி இப்போது தொடங்குவது இல்லை என்று 5, 6 ஆண்டுக் காலம் ஆரம்பப் பள்ளிக்கூடம் கைவிடப்பட்டது. கடந்த ஆண்டுதான் 50 பள்ளிக்கூடங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பின்தங்கிய மக்கள் வாழ்கிற பகுதியில் தொடங்குவதற்கு அரசு ஆணையிட்டது. இந்த ஆண்டு சற்று பரவலாக 500 மக்களுக்கு மேலுள்ள கிராமங்களில் அல்லது குடியிருப்புகளில் ஏறத்தாழ 439 இடங்கள் இன்னும் பள்ளிக்கூடம் இல்லாமல் இருக்கின்றன என்ற கருத்து பெறப்பட்டிருக்கிற காரணத்தால், அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு ஈடுபட்டு இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்கள் கூட, 25 பேர் இருந்தால் கூட நடத்தவேண்டிய நிலைமையிலேதான் தொடங்க வேண்டும்.

9-05 மணி

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, பல ஊர்களில் பள்ளிக் கட்டிடம் கட்டி 'ஃபர்னிச்சர்' வாங்குவதற்காக ஒரு குழு அமைத்து, ஐயாயிரம் ரூபாய் வரை போஸ்ட் ஆபீஸில் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது அப்படிப்பட்ட பள்ளிக் கூடங்கள் அனைத்திற்கும் இந்த ஆண்டு அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : நிச்சயமாகக் கருதிப் பார்க்கப்படும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தயார் நிலையில் இருக்கின்ற கட்டிட வசதி மற்றைய ஏனைய வசதிகளுடன் தயார் நிலையில் இருக்கின்ற பள்ளிகளை, உடனடியாக ஆரம்பிக்க அரசு உத்த விடும் என்று தெரிவித்தார்கள். இந்த அடிப்படையில் மாவட்

டத்திற்கு இத்தனைப் பள்ளிகள் என்று அறிவிக்க இயலுமா? அல்லது, ஒன்றியத்திற்கு இத்தனைப் பள்ளிகள் என்று டார்ஜெட் நிர்ணயிக்கப்படுமா? அல்லது தமிழகத்திலே இருக்கின்ற—கட்டிட வசதி தயார் நிலையில் இருக்கின்ற அத்தனைப் பள்ளிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிட வசதி தயாராக இருக்கக் கூடிய நிலைமையிலே இருக்குமானால், அது ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டிருக்கும். பள்ளிக்கூடம் நடத்தப்பட்டிருக்கும். அப்படி ஒன்றிரண்டு இல்லையானால், அது கவனிக்கப்படும். ஆனால் மற்ற இடங்களில், மாவட்டத்திற்கு இத்தனை என்றோ ஒன்றியத்திற்கு இத்தனை என்றோ பங்கிடுவது முறையல்ல, இந்த 439 கிராமங்கள் எங்கே இருக்கின்றனவோ, அங்கே பள்ளி தொடங்குவதுதான் அரசினுடைய நோக்கம்.

பாதி விலையில் உணவு விநியோக முறையைச் சிறைக் காவலர்களுக்கும் வழங்குதல்.

*4349—திரு. சு. குருநபதன் :
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறை காவலர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பாதி விலையில் உணவு விநியோக முறையைப் போன்று சிறை காவலர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மலிவு விலையில் காவல் துறை காவலர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு விநியோக முறையைப் போன்று, சிறைத் துறையில் உள்ள காவலர்களுக்கும் மலிவு விலையில் உணவு விநியோகம் வழங்க அரசுக்கு சிறைத் துறைத் தலைவர் அனுப்பிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது உறுப்பினர் கேள்வி கேட்டபோது இருந்த நிலைமை; தற்போது, இதன் நிலைமை, 9—4—1990-ல் நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், காவல் துறையின ருக்கு அளிப்பதைப் போல, சிறைத் துறை அலுவலர்களுக்கும் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது நடை முறைப்படுத்தப்படும்.